ஜெய் சாயி ராம்

# துன்பத்தின் வித்து விடுதலை

செ. ஞானசேகரம்

அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா
சங்க இணைப்புக்குழு வெளியீடு.

வரதராஜன் ஆறுமுகம்

ஜெய் சாயி ராம்

# துன்பத்தின் வித்து
# விடுதலை


செ. ஞானசேகரம்
(கொக்குவில்)



அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்யசாயி
சேவா சங்க இணைப்புக்குழு வெளியீடு

ரூபா 5-00

# முகவுரை

இந்நூல் யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த அறிவாற்றலுள்ள ஒரு பையனுடைய கதை. இவர் மரணிக்கும் காலத்தில பாலவிகாஸ் மாணவனுயிருக்கக்கூடிய இளம் வயசினராயிருந்தார்.

ஆனுல் இந்தக்கதை ஒரு வித்தியாசமானது. இது ஒரு வாழ்க்கை வரலாறுமல்ல, நினைவு மலருமல்ல. இறைவனுடைய தெய்விகத் திட்டத்தில் துன்பமும் ஒரு பாகம் வகிக்கிறது என்பதைப் பரிசோதித்தறிந்து கொள்ளும்படி வாசகர்களுக்கு விடும் அழைப்பு இது.

ஆம், தாங்கமுடியாத ஒரு நோயினுல் பீடிக்கப்பட்டிருந்தும்; ஒரு பதினுறு வயசுப் பையன்கூட, சக மனிதருக்கு மிக உயர்ந்த ஒரு ஆத்மீக உண்மையை வாழ்ந்து காட்ட முடியும்.

தர்மேந்திரன் சுவாமியிடம் முதலில் சென்றது தன்னுடைய நோயை அவர் மாற்றுவார் என்னும் எதிர்பார்ப்புடனேயே. இது இவ்வயசுடைய எவ்விளைஞனும் இயற்கையாக எதிர்பார்க்கக் கூடியதே. ஸ்வாமியிடமிருந்து திரும்பி வந்ததும் ஸ்வாமியினுடைய போதனைகள் ஒழுங்காக ஆய்ந்தறியப்படும் ஒரு சத் சங்கத்திற்குப் போய் வரத் தொடங்கினுர். தன்னுடைய நோயை ஒரு புதுத் திருஷ்டியில் நோக்குகிறுர். வெகு சொற்பகாலத்திலேயே மிக உயர்ந்த ஆத்மீக அறிவை அடைய அதை ஒரு ஏணியாக்கிக் கொண்டார். அவருடைய குரு அவருக்கு இதில் ஊக்கமளிக்கிறுர். ஒருவகையில் இந்நூல் குருவினுல் சிஷனுக்குக் கொடுக்கப்படும் ஒரு பாராட்டுரையே.

உடலைவிட்டு உயிர் நீங்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது பாபாவின் ஒரு (கடைசி) தரிசனத்தைப் பெற வேண்டும் என்று தர்மேந்திரன் பெற்றேரிடம் மன்றுடு

கிறார். அவருடைய உடல் நிலை ஒரு சிறிது தூரந்தானும் பயணம் செய்ய உவந்ததாயில்லை என்ற புத்திமதியை எல்லாம் உதாசீனம் செய்கிறார். இறுதியில் பெற்றோர் இணங்கி படுக்கை விரிப்புகளில் அவரைக் கிடத்தித் தூக்கிக் கொண்டு எல்லாவிதமான வாகனங்கள் வழியாகவும் சித்தன்கேணியிலிருந்து புட்டபர்த்திக்குக் கொண்டு செல்லப்படுகிறார் அங்கே அவர் விரும்பிய தர்சனத்தைப் பெற்றார்.

அந்நேரத்தில் பிரசாந்தி நிலையத்தில் ஒரு குடியிருப்பாளராக இருந்து வந்த ஒரு பெண்மணியிடமிருந்து தர்மேந்திரனுடைய இறுதிநாட்களைப்பற்றி அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பெண்மணி அவருடைய கதையைச் சொல்லும் பொழுது அவருடைய கண்களிலிருந்து நீர் சொரிந்து கொண்டிருந்தது. ஒரு தாயாகவுள்ள அவர் தாங்கமுடியாத வருத்த நிலையில் இருந்த அப்பையனுடைய ஆனந்தம் பொலியும் முகத்தை மறக்க முடியாதவராயிருந்தார். யாவரும் பார்த்துக் கொண்டிருக்கவே அவருடைய உடல் ஒவ்வொரு நிமிஷமும் இறந்து கொண்டுபோக இத்தகைய ஆனந்தம் முகத்தில் எப்படி இருக்க முடியும்? அந்தப் பையனுடைய வரலாற்றைக் கூறிக் கொண்டிருந்த அப்பெண்மணி இந்தக் கேள்வியை இடையிடையே எழுப்பிக்கொண்டிருந்தார். பிரசாந்தி நிலைய கோபுரத்தருகில் தர்மேந்திரன் தன் இறுதி மூச்சைவிட்டார். ஸ்வாமியின் உத்தரவின் பிரகாரம் பிரசாந்தி நிலையம் அவருடைய ஈமக் கிரியைகளை நிறைவேற்றியது. (பிரசாந்தி நிலையக் குடியிருப்பாளர்களுக்கே இச்சலுகை வழமையாகக் கொடுக்கப் படுவது).

ஸ்வாமி ஏன் தன்னுடைய அருளுரைகளைத் தொடங்கும்போது ஆனந்த சொரூபிகளே, ஆத்ம சொரூபிகளே, பிரேமை சொரூபிகளே என்று எம்மை விழிக்கிறார். அவர் தன் அருளுரையின் முதல் கூற்றாக எமக்குச் சூடும் இந்நாம மல்லவா பின்னால்வரும் அருளுரையின் சாரமா

கிறது. தர்மேந்திரன் அற்புதத்தினால் தன்நோய் மாறும் என்றதெல்லாவற்றையும் கைவிட்டு, இந்தக் கேள்விக்கு விடையைத்தன் ஆழத்திலே தேடினார்.

பெற்றோர் ஒரே ஒரு மகனை இழந்தனர். தங்கை ஒரே ஒரு அண்ணனை இழந்தார். ஆனால் இந்த மகன், தான் அவர்களை விட்டுப் பிரியுமுன்னரே அவர்களை ஆத்மீக சாதனையில் ஈடுபடுத்திவிட்டார். அவர்களும் தளராத ஆர்வத்துடன் இன்றும் சத் சங்கத்தில் பங்குபற்றி வருகிறார்கள். இந்நூல் வெளிவருவதற்கும் உதவி சக பக்தர்களுடன் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்கள். இந்நூலின் விற்பனையால் வரும் பணத்தை அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்யசாயி நிறுவனத்தின் இணைப்புக் குழுவிற்கு அன்பளிப்புச் செய்கிறார்கள்.

S. சிவஞானம்,

அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சங்க இணைப்புக் குழுத் தலைவர்.

ஜெய் சாயி ராம்

# துன்பம் விடுதலைக்கு வித்து

## விடுதலை என்றால் என்ன?

மனித வாழ்வின் அதி உயர்ந்த இலட்சியம் விடுதலை என்பது உண்மை உணர்ந்தோர் கண்ட முடிபு. விடுதலை என்பது விடுதல். எதனை விடுதல்? இந்த சம்சார வாழ்வில், எது எது கசப்பாக இருக்கிறதோ, அஃதாவது, பயமாய், கவலையாய், துன்பமாய், சோகமாய், இருப்பன வற்றையெல்லாம் விடுதல்.

இந்த அசுபங்கள் நம்மைப் பிடிக்கும்போது பதைக்கிறோம். இவை எப்பொழுது நீங்கும் என ஏங்குகிறோம். அவற்றையெல்லாம் விட்டு நீங்கி, அத்தகைய துன்பமானவை இல்லாதிருக்கவே நாம் விரும்புகிறோம். ஆனால், இந்தத் துன்பங்களெல்லாம் நமக்கு வேண்டாம் என்று எண்ணியவுடன் நம்மை விட்டுப் போய்விடுகின்றனவா? எவ்வளவுதான் முயன்றாலும் எத்தனை தந்திரம் பண்ணினாலும் எங்கள் திறமைகளினால் இவற்றை நீக்கிவிட முடிகிறதில்லை.

இந்தத் துன்பங்களையெல்லாம் நாம் நேரடியாகத் தேடவில்லை. எந்த மனிதனும் தனக்குத் துன்பம் வேண்டும் என்று அதற்காகவே உழைப்பதோ தேடுவதோ கிடையாது. மனிதன் எனக்கு வேண்டியதையெல்லாம் தேடிக்கொள்வேன், தேடுகிறேன். "எனக்கு செல்வம் உண்டு; வலிமை உண்டு; அந்தஸ்து உண்டு; செல்வாக்கு உண்டு; எதையும் என்னால் சாதிக்க முடியும்" என்கிறான். அவன் பெரும் ஊக்கத்தோடு இரவு பகலாக உழைக்கிறான். பெருமை கொள்கிறான்; வீரம் பேசுகிறான்; ஆனால் இருந்தாற்போல் அவன் தீக்குழிக்குள் தள்ளி வீழ்த்தப்பட்டவன் போல் துடிக்கிறான். "ஐயோ! எனக்கு உதவிக்கு ஒருவரும்

இல்லையா?'' என ஓலமிடுகிறான். அவன் 'தன்னுடையது என்று சொல்லி வந்த எல்லா வல்லமைகளும் அவனுக்கு உதவா நிலையில், நிர்க்கதியாய்த் தாங்கொணாத் துயரத்தில் இருந்து பல காலம் தவிக்கிறான்.

ஏன் இது? இந்தத் துன்பம் இவனுக்கு எப்படி வந்தது? துன்பத்தை இவன் தேடினானா? எந்த மூடனும் இன்பத்தையேயல்லவா தேடுவான். அப்படியானால் துன்பம் வந்தவழி எது? இவன் தேடியவையெல்லாம் என்ன?

## இன்பம் நிலையானதல்ல

காலையில் எழுந்த நேரம் தொட்டு உறங்கும் நேரம் வரை இவன் எங்கு இன்பம் உண்டு, எந்தப்பொருளைத் தேடின் இன்பம் வரும் என்றே ஒவ்வொரு க்ஷணமும் உற்சாகத்துடன் முயல்கிறான். ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்றபடியே பல வழிகளாலும் பணமும் பொருளும் தேடுகிறான். அது இன்பத்தைத் தரும் என்றே தேடுகிறான். ஒவ்வொரு பொருளும் பணமும் தனக்குக் கிடைக்கும்போது பெரும் சந்தோஷப்படுகிறான் ஒவ்வொரு பொருளிலும் பணத்திலும் நிறைய சந்தோஷம் வரும் என்று மேலும் மேலும் பொருளும் பணமும் தேடுகிறான். தேடிப் பெறும்போது அவனுக்குப் பெரும் சந்தோஷம் கிடைப்பது போல் தெரிகிறது. இப்படி சந்தோஷத்தையே தேடிக் கொண்டு பொருள் பண்டம் இவற்றை சந்தோஷங்களாகக் கண்டு அவற்றைத் தேடிக்கொண்டு வருப்பவனுக்கு ஏன் இடியேறுபோல பெரும் சோகமோ பயமோ வந்து அவனை மூடுகிறது?

அவன் பொருள்களைத் தேடும்போது, அஃதாவது, உதாரணத்திற்கு, ஒரு தொலைக்காட்சிப் பெட்டியையோ அல்லது விலையுயர்ந்ததொரு நகையையோ கண்டு சந்தோஷப்படும்போது அதைத் தான் பெறவேண்டும் என்று மனம் அவனை அரிக்கிறது. அவன் அதைப் பணம் கொடுத்து மிகுந்த சந்தோஷத்துடன் எடுக்கிறான். அதைக் கையில்

எடுத்துக் கொள்ளும்வரை அவனது சந்தோஷம் உயர்ந்த தாகவே இருந்தது; வீட்டுக்கும் கொண்டுவந்து சேர்க்கிறான். இந்த, வாங்கிமுடிந்ததற்கும் வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கும் இடையில், அவனது சந்தோஷத்தின் பாதி, தான் பெற்ற பொருளைப்பற்றிய கரிசனையாகவும் தன்னு டைய பொருள் என்ற பெருமையாகவும் மாறிவிடுகிறது. வீட்டுக்குப் பொருளைக் கொண்டுவந்து சேர்க்கும்போது ஒரே குதூகலம்! மனைவி மக்களும் தானும் ஒரே சந்தோஷ மாகவும், கொண்டாட்டமாகவும் சிலமணிநேரம் இருக்கிறார் கள். பின் மெல்ல மெல்ல அந்தச் சந்தோஷம் மறைந்து விடுகிறது. அந்தப்பொருளை எங்கே வைப்பது, எப்படிப் பாதுகாப்பது, யாராவது கொண்டுபோய்விடுவார்களோ என்ற பயம் மெதுவாக நுழைகிறது. 'தன்னுடையது' என்ற நிலை வந்தவுடன்தான் இது உண்டாகிறது. அந்தப் பொருளுக்கு யாராவது ஊறுசெய்தால் கோபம் உண்டா கிறது. அந்தப் பொருளுக்குச் செய்த ஊறு தனது நெஞ் சில் பட்டதுபோல அவனுக்குப் படுகிறது. பொருளை வாங்கு கிறபோது இருந்த சந்தோஷம் மாயமாக மறைந்ததுதான்! பிறகு அது ஒருபோதும் வந்ததேயில்லை. தன்னுடையது என்ற பெருமையும் அதற்குள் உறங்கிக் கொண்டிருக்கும் சினமும் பயமும் சோகமும்தான், அவன் பெரிய சந்தோ ஷத்தோடு கொண்டுவந்த பொருளில் சந்தோஷம் மறைந்து போக மீதியாய் நிரந்தரமாகக் கிடைப்பது. (யாராவது பொருளில் தீண்டினால் சினம்; பொருளை இழந்துவிடு வோமோ என்ற பயம்; பொருளை இழப்பின் சோகம்).

இங்ஙனம் அவன் மிகவும் உற்சாகத்தோடு நாளும் பொழுதுமாகத் தேடித்தேடிக் கொண்டுவந்து சேர்த்த, 'தன்னுடையது' என்று சொல்லக்கூடிய, பொருளாக இருந்தாலென்ன, கல்வியாக இருந்தாலென்ன, கொள்கை யாக இருந்தாலென்ன, எல்லாம் அவனிடம் வந்து சேரும் போது பெரும் இன்பத்தோடு வருவன. வந்துசேர்ந்த சில மணித்தியாலங்களுக்குள்ளேயே அவ்வின்பம் மறைந்து

போவன, ஆயின், இந்தப் பொருள்களின் மூலம் நிரந்தர மாக வந்து நிற்பனவே சினம், பயம், சோகம் என்பன.

ஆக, இன்பம் இன்பம் என்று மனிதன் தேடுகிற ஒவ் வொரு பொருளிலும், வந்த சில காலத்தில் அவ்வின்பம் மறைந்து போவதால், இன்பத்துக்காக மீண்டும் வேறு பொருட்களைத் தேடுகிறான். அதுவும் மறைந்துபோக, மேலும் மேலும் பொருட்களைத் தேடுகிறான். ஆனால் இன் பம் என்று தேடியது என்ன என்பதை அவன் அறியான்.

## துன்பம் வந்த மார்க்கம்

உலக மக்களின் போக்கு இதுவே. இன்பம் தேடுவதுதான் அவர்களுக்குத் தெரிந்தது. அந்த இன்பமோ அற்பம். மின்னி மறைந்துபோகும் என்பதையும் கூட அவர்களாற் கவனிக்க முடிவதில்லை.

'துன்பம் வந்த வழி அறியார் உலக மாந்தர்' இறைவனுடைய படைப்பு அழகு! அற்புதம்!! புதுமை!!! எந்தப் பக்கம் திரும்பினாலும் இன்பம் உண்டு. அடுத்த வீட்டில் நன்றாக மலர்ந்து குலுங்கும் ரோஜா மலரைப் பார்த்து ஆனந்தம் பெறலாம். அப்படி ஆனந்தப்பட மனி தனுக்குப் புத்தி கிடையாது. தன் வீட்டிலே, தன்னுடைய தாக இருந்தாற்தான் சந்தோஷம் வரும் என எண்ணுகி றான். தன்னுடையது என்ற எண்ணம் வந்த உடனேயே அவனுக்குப் பெருமைதான் மேலோங்கி நிற்கும். அவனு டைய சந்தோஷத்தை பெருமை விழுங்கிவிடும். முன்பு கூறியதுபோலவே சினம், பயம், சோகம் ஆதியனவே அவனிடத்து நிரந்தரமாக எஞ்சும்.

இந்த இன்பத்திற்கும் துன்பத்திற்கும் தொடர்பு உண்டா? அநேகமான மக்களுக்கு இது தெரியாது. இந் தப் பிரபஞ்சம் பலவாகத் தோன்றுகிறது. ஆனால் இது உண்மையில் ஒன்று. ஒரு பரமதத்துவமே நானும் நீயும், அதுவும் இதுவும் எல்லாமாகவும் திகழுகிறது. ஒன்றுதான்

சத்தியம். ஆனால் நாம் காண்பதோ பல. இந்தப் பலவாகக் காணப்படுவதெல்லாம் தோன்றிமறைவதாக உள்ளது. தோன்றும்போது இன்பம்; மறையும்போது துன்பம். இங்கு காணப்படுவதெல்லாம் இன்பமும் பின் துன்பமுமாய், ஏற்றமும் பின் இறக்கமுமாய், வரத்தும் பின் போக்குமாய் ஒன்றுக்கொன்று எதிர்மாறான தன்மையுள்ளவை. சுகத்தின் பலாபலனாகத் துக்கம் வருகிறது. ஏற்றத்தின் பலாபலனாக இறக்கம் வருகிறது. இந்த எதிர்மாறான பலாபலன்கள் தொடர்ந்து உடன் வராமல் காலம் தாழ்த்தி வருவதனால் மக்களால் இந்தத் துன்பம் எல்லாம் இன்பத்திலிருந்து தான் வருகிறது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடிவதில்லை. அதனால் அவர்கள் இன்பத்தையே தேடுவதில் கருத்தாய் இருக்கிறார்கள். இருந்தும், அவர்கள் வாழ்வை துன்பம் ஆட்சி செலுத்துவது இதன் காரணத்தினாலேயே.

## சாந்திக்கு வழி

இனி, இன்பமா துன்பமா உண்மையான நலம் தருவது? அஃதாவது, எது சாந்திக்கு கூடிய அண்மையில் உள்ளது என்று பார்க்கலாம். இன்பம் முதல் வருகிறது. அதன் பலாபலனாகவே அதனைச் சமன்படுத்தவே துன்பம் வருகிறது. "கீதை" இதனை 'நடுவு நிலை யோகம்' என்று குறிப்பிடு கிறது. துன்பமும் வந்து இன்பத்தைத் துடைத்து விடுகிறது. விவேகம் உள்ளவர்கள், இன்பத்தினால் குதாகலிக்கவும் வேண்டாம் அதன் பலாபலனாகிய துன்பத்தினால் துடிதுடிக் கவும் வேண்டாம் என்று உணர்ந்து இரண்டையுமே தவிர்ப் பார்கள்.

இன்பம் நுகர்வதை ஒருவனால் விடமுடியும். அவன் விரும்பியே இன்பத்தை நாடுகிறான். அந்த விருப்பத்தை விட்டால் இன்பம் வராது. ஆனால், துன்பத்தை எவரா லும் விடமுடியாது. தன்னுடைய பலத்தினால் ஓர் அற்ப துன்பத்தைக்கூட தவிர்க்க முடியாதவனாய் மனிதன் இருக் கிறான். ஆதலினால், அறிவாளியான மனிதன், கீதையின்

கூற்றுப்படியே இன்ப துன்பத்திலும் நடுவு நிலையைக் கையாள வேண்டும் என்று விரும்பி இன்பத்தைத் தவிர்ப்பான். இன்பத்தைத் தவிர்ப்பதுதான் அதனால் விளையும் துன்பத்தைத் தவிர்ப்பதாகும். இதனால் ஏற்றம் இறக்கம், போக்குவரத்து ஆகிய சலனங்கள் இல்லாத சாந்தி நிலையை, அஃதாவது, தன்னுடைய உண்மையான ஆத்மாவின் நிலையை மனிதன் அணுகுகிறான்.

## துன்பத்தைத் தவிர்க்க விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

நாம் தெளிவாக நினைவில் வைத்திருக்க வேண்டியது இது. "துன்பம் தவிர்க்கமுடியாதது; துன்பத்திற்கு ஏதுவான இன்பமே தவிர்க்கப்பட வேண்டியது" என்பதே. ஆதலினால் நாம் பொருட்கள் முதலியனவற்றின் மூலம் புலன்கள் வழியாகப் பெறும் இன்பம் எல்லாவற்றையும் விழிப்போடு தவிர்த்து வாழ்வை நடாத்தும்பொழுது துன்பமில்லா வாழ்வு நமக்குக் கிடைக்கிறது. நம்முடைய இயற்கையான, ஆத்மதத்துவமான சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆதியன அப்போது எம்மிடத்தில் வெளிப்படுகின்றன, தெய்வீகம் ஒளிருகிறது. இன்பத்தை நாம் ஒழிப்போம் எனத் திடம் கொண்டுவிட்டோம் என வைத்துக் கொள்வோமாயின் அதனால் நாம் இன்பப்படாத காரியத்தின் துன்பம் என்ற பிரதிபலனும் வராது. ஆனால், முன்பு அனுபவித்த இன்பங்களின் விளைவான துன்பங்கள் நம்மை விடப்போவதில்லை. பாவமான வழிகளிலே, செருக்கினால் நாம் இன்பம் கண்டிருந்தால், நமக்கு வரக்கூடிய துன்பம் கடுமையானதாக இருக்கும். ஒரு வித்திலிருந்து ஒரு வித்துக்கிடைப்பதில்லை. ஒரு வித்து மரமாகி ஆயிரம், இலட்சம், கோடி வித்துக்களைத் தருகிறது. ஒவ்வொரு நல்லெண்ணமும் தீய எண்ணமும் எத்தனையோ மடங்காகப் பெருகி சுகமாகவோ துக்கமாகவோ விளைகிறது.

## மகான்களின் உறுதிவாக்கு

நாம் துன்பமில்லாத வாழ்வினை வாழ்வதற்குத் திடம் கொண்டாலும், ஜென்ம கர்மமாக அறியாமையினால்

விளைந்த துன்பம் வந்து எம்மை மூடுகிறது. இதனை என்ன செய்வது? ''இந்தத் துன்பம் தவிர்க்க முடியாததா'' என்றால் ''அப்படியல்ல'' என அநேக மகான்கள், தெய்வ புருஷர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள்.

கிறிஸ்து நாதர்,

''நீ செய்த குற்றத்துக்காக பச்சாத்தாபப்படு;
உன்னுடைய குற்றங்கள் மன்னிக்கப்படும்'' என்கிறார்.

பகவான் சத்திய சாயி பாபா,

''நீ பச்சாத்தாபப்பட்டு இனிமேல் குற்றங்களைச்
செய்வதில்லை என்று உறுதி கொள்; உன்னுடைய
பாவங்கள் மன்னிக்கப்படும்''.

என்கிறார்.

ஞான சம்பந்தரோ,

''இறைவனையே தஞ்சமாகக் கொண்ட அடியார்க்கு
தீய கோளும் நாளும் மிகமிக நல்லனவாக உள்ளன''
என்கிறார்.

ஔவைப்பாட்டி இதனை மிகவும் தெளிவாக,

''சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை — உபாயம்
இதுவே மதியாகும் மற்றல்லாதவெல்லாம்
விதியே மதியாய் விடும்''. [என்கிறார்

துன்பம் ஒரு கேடா? இல்லவே இல்லை. துன்பமோ அகங்காரத்தை அடக்குகிறது இன்பம் அநேக துன்பத்திற்கு மனிதனை ஆளாக்குகிறது. அது நல்லதா? எது நல்லது? துன்பத்தின் விளைவையறியாத பாமரர் இன்பம் என்று ஓடியோடித் தேடுவதும் துன்பத்தையே. இன்பம் அறிவை மறைக்கிறது. உண்மையை மறைக்கிறது. துன்பமோ ''ஏன்'' என்று கேட்க வைக்கிறது.

இன்பத்திலிருக்கும்போது மனிதன் உண்மையை, கடவுளைத் தேடமாட்டான். ஆனால் தாங்கொணாத் துன்பம்

வந்ததும் லௌகிகமான செல்வமெல்லாம் அவனுக்குப் பிரயோசனமற்று நிற்பதைக் கண்டு 'கடவுளே'! என்கிறன். 'எதனுலே எனக்குத் துன்பம் வந்தது? நான் என்ன செய்துள்ளேன்' என்றெல்லாம் அவன் தீவிரமாக எண்ணுகிறன். உண்மை விவேகமுள்ளவனுக இருந்தால் துன்பத்தின் மூலத்தை அறிந்து அதை விலத்தும் மார்க்கத்தைத் தேடுவான். அந்த மார்க்கத்திலே அவனுக்குத் துன்பமில்லா வாழ்வு கிட்ட வழி உண்டு.

## துன்பத்தை மகான்கள் ஏன் ஏற்கிருர்கள்?

துன்பத்திலும் பலவகைகள் உண்டு. புலன்வழி போய் காம, குரோதங்கள் வளர்ந்து அகங்காரம் கொண்டு பிற உயிர்களை வருத்தி, அழித்துக் கொடுமை செய்தவர்களுக்கு வரும் துன்பம் சிறிதேனும் புண்ணியத் தொடர்பற்றதாகையினுல், அவர்கள் சாந்தி பெறும் மார்க்கங்களைத் தேடாமல் புத்தியில்லாத நிலையில், முழுத் துன்பத்தையும் வருந்தி வருந்தி அனுபவிக்கவே வேண்டியிருக்கிறது.

ஆனுல் இன்னெரு துன்பத்தைப் பாருங்கள். கிறிஸ்து நாதர், உலகத்தை உய்விக்க வந்த பரமதயாளர். அணுவளவேனும் பாவமற்றவர். பிறர் நலத்துக்காகவே முழுமையாக வாழ்ந்தவர். அவர் சிலுவையில் அறையப்பட்டு வருத்திக் கொல்லப்பட்டார். அந்தத் துன்பம் ஏதாவது புலனின்பத்தின் பிரதிபலிப்பா? இல்லை. அது அவராக அமைத்துக் கொண்டு வந்தது. "மக்கள் என்னுடைய கருத்துக்களை இப்பொழுது மெச்சுகிருர்கள். பிறகு மறந்து விடுவார்கள். நான் கூறிய கருத்துக்களின் பலன் இல்லாமல் போய்விடும். என்னுடைய கருத்துக்கள், அஃதாவது, மக்களெல்லாம் துன்பமற்ற பரமநிலையை நிச்சயமாக எய்த வேண்டும் என்ற மார்க்கத்தைப் பரப்பத்தான் நான் வந்துள்ளேன். என்னுடைய உடலைத் தியாகம் செய்தேனுனல் மக்கள் என்னை நினைத்து நினைத்து அனுதாபப்படுவார்கள். அந்த அனுதாபம் என்ற கசிவு உருவாகும் இதயத்திலே, நான் கூறி

வந்த கருத்துக்களின் வித்துக்கள் ஓங்கி வளர்ந்து பலனளிக்கும்'' என்றெண்ணியே கிறிஸ்துநாதர் துன்பத்தை ஏற்றிருக்கவேண்டும். இந்தத் தியாகச் சுடருடைய விருப்பம்—அவர் சங்கற்பமே—அவரைச் சிலுவையில் அறைதல் என்ற துன்பமாக வந்தது.

இனி, 'மக்களிடையே பெரிய தகைமை உடையவர்கள், ஆத்ம விடுதலையில் துடிப்பும் தாகமும் கொண்டவர்கள், தங்களுடைய விடுதலையைத் துரிதப்படுத்தவே துன்பங்களை இறைவனிடம் வேண்டிப் பெற்றுக் கொள்கிறார்கள்' என்பது நாம் கருத்திற் கொள்ளலாம்.

பரீட்சித்து என்ற அரசன் விளையாட்டாக தியானத்திலிருந்த ஒரு முனிவரின் கழுத்தில் செத்த பாம்பொன்றினை மாட்டிவிட்டதற்காக முனிவரின் மகன் அந்த அரசனை ஏழு நாட்களில் தட்சன் என்னும் பாம்பினால் தீண்டப்பட்டு இறப்பான் எனச் சாபம் இட்டார். இதையறிந்த அரசன் தான் மரணிக்கப் போவதைப்பற்றிய அச்சம் கவலை என்பனவற்றை விட்டு அந்த ஏழு நாட்களில் மனிதப்பிறவியின் இலட்சியத்தையடைந்துவிடவேண்டும் என்ற கருத்தை அவனது பூர்வஜென்ம தவம் அவனுக்கு நினைவூட்டவே, அரண்மனை, மனைவி மக்கள் யாவற்றையும் துறந்து, கங்கைக் கரைக்குச்சென்று ஒரு க்ஷணத்தில் தனது உலகப்பற்றுக்களை நீக்கினான். அவனுடைய கருத்திற்கிணங்க அவனைச் சுற்றி முனிவர்கள் வந்து சூழ்ந்து கொண்டனர். பிரம்மரிஷியாகிய சுகரும் அங்கே வந்து சேர்ந்தார்.

கிருஷ்ண பரமாத்மாவினுடைய அவதார லீலைகளை சுகர் சொல்லக்கேட்டும் ஆத்மதத்துவத்தை அவர் விளக்கக்கேட்டும் எண்ணம் முழுவதும் அந்த மெய்ப்பொருளிலேயே ஊன்றியிருந்து ஏழு நாட்களில் தனது விடுதலையைப் பரீட்சித்து எய்தினான். சாபத்தினால் ஏற்பட்ட துன்பமே, மரணத்தினுடைய அச்சுறுத்தலே பரீட்சித்துக்கு விடுதலையை எய்த வழி அமைத்துக் கொடுத்தது.

விடுதலைக்கு துன்பம் எவ்வளவு தத்துவமாக நின்று உதவுகிறது! பிரம்ம ரிஷியாகிய சுகர், பரீட்சித்துக்கு உபதேசம் ஆரம்பிக்கு முன்னர், பரீட்சித்தை ஆத்மவழியில் ஊக்கப்படுத்துமுகமாக, கட்வாங்கர் என்ற ரிஷியினுடைய கதையைக்கூறினார். கட்வாங்கர் ஒருமுறை தேவர்களுக்காக, அசுரர்களோடு போர் செய்து வெற்றி ஈட்டிக் கொடுத்ததற்கு உபகாரமாக தேவர்கள் கட்வாங்கரை என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார்கள். கட்வாங்கர் அதற்கு "நான் இறப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் உள்ளது" என்று கூறும்படி கேட்டார். தேவர்கள் "ஒரு நாழிகை தான் உண்டு" என்றனர். உடனே கட்வாங்கர் விரைந்து காட்டுக்குச் சென்று ஒரு புலிக்கு எதிரே பாய்ந்து அதனால் தன்னுடலை இழந்து முக்தி பெற்றார். லௌகிக சம்சாரப் பற்றுக்களையெல்லாம் நீக்கிய ரிஷி, தான் இந்தத் தோற்றம், தன்னுடைய அறிவு, தனக்கென்றொரு தகைமை என்ற இந்த அகங்கார மமகாரங்கள் தன் உடல் தோற்றத்தோடு பின்னிப்பிணைந்து நீக்கமுடியாமல் இருப்பதைக்கண்டு, புலியினால் உண்ணப்பட்டு வரக்கூடிய தாங்கமுடியாத துன்பத்தை ஏற்பதனால் உடற்பற்றுக்களினின்றும் விடுதலை பெறுவேன் என்று உறுதிகொண்டு அவ்வண்ணமே தன் உடற்பற்றை வென்று விடுதலை பெற்றார்.

மகான்கள் விடுதலை பெறுவதற்காக கொடும் துன்பத்தையெல்லாம் விரும்பி ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. விடுதலை நாட்டம் கொண்ட புருஷ சிரேஷ்டர்களுடைய காரியம் சாதாரண மக்களுக்குப் புரியாத புதிராகவே இருக்கும். அவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் துன்பம் சாதாரண மக்களைப் போன்று கவலையோ சோகமோ சிறிதும் அற்றது. உடல் எல்லாம் வருந்த, அவர்களுக்கு முகத்தில் ஆனந்தப் பொலிவும், வாக்கிலும் மனதிலும் இறைவனைப் பற்றிய அறிவில் தாகம் மேலோங்கியும் இருக்கும். ஒரு ஜென்மத்திலே, தான் தன்னுடைய விடுதலையைப் பெறமுடியாமல் இருக்கும் நிலையைக்கண்டு, அடுத்த ஜென்மத்தில் தன்னுடைய

உடலுக்குத் துன்பத்தைத் தந்து தன்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று இறைவனிடம் கேட்ட உண்மையான வேண்டுதலுக்காகவும் சில மகான்கள் துன்பப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் மனம் இறைவனிடத்தில் ஊன்றியிருக்க, உடல் வருத்தத்தைச் சாட்சிபோல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## தர்மேந்திரனின் உதாரண வாழ்க்கை

இவ்விதம் தனக்கு நோயைத்தந்து தடுத்து ஆட்கொள்ளுமாறு முன் ஜென்மத்தில் வேண்டிக் கொண்டவர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் யாழ்ப்பாணம் சித்தங்கேணியைச் சேர்ந்த 16 வயதுப் பிராயத்தினரான தர்மேந்திரன் என்பவர்.

தந்தை தாய்க்கு ஒரு புத்திரனாய் கல்வியிலும் விளையாட்டிலும் பாடசாலையில் முதலிடத்தைப் பெற்று வந்தவர். 15 வயதிலேயே இடுப்பெலும்பில் புற்றுநோய் பரவியுள்ளதாகக் காணப்பட்டார். கதிர்வீச்சுச் சிகிச்சை, இரசாயன மருந்துச் சிகிச்சை ஆகியவற்றுக்குப் பின்னர் வைத்தியர்கள் சத்திர சிகிச்சை செய்யக் கேட்கவும் அவர் அதனை மறுத்து பகவான் சத்திய சாயிபாபாவிடம் போகப் பெரிதும் விரும்பினார்.

சர்வாவதாரமாக வந்து அவதரித்திருக்கும் பகவான் சத்திய சாயி பாபாவையே உடலுக்கு மட்டுமன்றி மனக் கிலேசங்களுக்கும் சிகிச்சையளிக்க வல்லவர் என்று நம்பிக்கை கொண்டு தாய் தந்தையருடன் புட்டபர்த்திக்குச் சென்றார், அங்கே சுவாமி, தரிசனத்தின்போது விபூதி வழங்கி தர்மேந்திரனை ஆசிர்வதித்தார். பின்னர் ஒருநாள் பாபா அவரைத்தன் அறைக்கு அழைத்து ஒரு பக்கம் 'ஓம்' என்று எழுதப்பட்டதும் மறுபக்கம் சாயிபாபாவின் உருவம் பொறித்ததுமான பஞ்சலோகப்பதக்கம் ஒன்றை உண்டாக்கிக் கொடுத்தார். சுவாமியினுடைய எல்லையற்ற

கருணையை நினைந்து நினைந்து மனமுருகி அவரின் நாமத்துடனேயே தர்மேந்திரன் தன்காலத்தைக் கழித்தார்.

சுவாமியைத் தரிசித்த நாட்களிலிருந்தே அவரிடத்தே தெய்வ நாட்டம் மிகத் தீவிரமாக எழுந்தது. தனது மாமனார் குடும்பம், மாமிமார் மற்றும் சில இனத்தவர்களும் தனது வீட்டிலிருந்து 7 மைல் தொலைவில் "பாகவத சப்தக பாராயணத்திற்கு போக இருப்பதை யறிந்து இவரும் பெரு விருப்பத்துடன் அவ்விடத்தே போய் தனது உடல் வருத்தத்தையும் மறந்து காலை 7 மணிக்கு ஆரம்பமாகி பகல் 1 மணியளவில் முடியும் அந்த பாகவத சப்தக பாராயணத்தை ஆர்வத்தோடும் ஆனந்தத்தோடும் மெய்ம்மறந்து கேட்டுவந்தார். பாகவத சப்தகம் முடிந்ததும் இவருடைய ஆத்மீக தாகத்தைக் கண்ணுற்று 'இவர் உடம்பல்ல, அழியாத ஆத்ம தத்துவமே' என்பதை இவருக்குத் தெளிவாக்க எண்ணி 3 நாட்கள் தொடர்ச்சியாக 9 மணிமுதல் 1 மணிவரை பிரத்தியேகமாக கருத்துரைகள் இருவருக்கு வழங்கப்பட்டன. இதன் பிறகு ஆத்மதத்துவம் தெளிந்தவராய் கேட்கப்பட்ட வினாக்களுக்கெல்லாம் உயர்ந்த தெளிந்த விடைபகர்ந்து ஆத்மலயம் உள்ளவராகத் திகழ்ந்தார்.

இந்தத் தொடர்போடு அவருடைய பூர்வஜென்ம தவம் தொடரலாயிற்று. அங்கு கூடி ஆத்மிக சாதனையில் பங்குபற்றும் அடியார்களிடத்தில், விசேஷமாக, சத்சங்கத்தை நடாத்துபவரிடத்தும் அவரது கருத்துக்களிலும் தர்மேந்திரன் மிகுந்த பிரேமை கொண்டார். எப்போதெல்லாம் சாதனைகள் நடாத்தப்படுகின்றனவோ அவ்வப்போது அங்கு வந்து பங்குபற்றுவார். யோகர் சுவாமிகளருளிய நற்சிந்தனை மற்றும் ஆத்ம தத்துவங்களை அறிவதற்காக தானாக விரும்பி, தாய் தந்தையரால் அங்கு அடிக்கடி அழைத்துவரப்பட்டு, ஏறக்குறைய 150 மணித்தியாலங்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றினார். அவரது வருத்தம் அதிகரிக்கத் தொடங்கி ஓர் ஒன்பது மாதங்களில் குறைந்தது 30 தடவைகளாவது அவரது விருப்

பத்திற்கிணங்க, பெருவிருப்போடு தாய் தந்தையர் அவரை சத்சங்கத்திற்கு காரில் அழைத்து வந்தனர். உடலோ பெரும் உபாதைப்பட்டிருந்தும் உடம்பிலே தொடமுடியாத நோ இருந்தும் அவரை ஒரு விரிப்பிலே தூக்கிக் கொண்டுவர வேண்டிய நொய்த நிலையிலும் கூட, இத்தனை தூரம் வந்து ஒரு வருத்தமும் இல்லாதவர்போல் 4, 5 மணித்தியாலங்கள் அங்கே ஆனந்தமாக இருந்து ஆனந்தமாகவே திருப்தியுடன் செல்வார். வருத்தம் அதிகரித்த நிலையிலும் ஒருமுறை ஓர் இரவு முழுவதும் நடாத்தப்பட்ட ஒரு சாதனையில் பெரு விருப்பத்தோடு பங்குபற்றினர். அவரது நினைவு பகவானிலும் ஆத்மதத்துவங்களிலுமேயே லயித்துக் கொண்டு இருக்கும். அவருடைய பாட்டி ''பொல்லாத நோவினுலே வருந்திக் கஷ்டப்படுவான்; ஆனுல் இவ்வளவு தூரம் சத்சங்கத்துக்குப் போய் பல மணித்தியாலங்கள் கழித்து, வருத்தம் ஒன்றுமேயில்லாதவன்போல் வீடு திரும்புவான்'' என்று கூறுவார்.

ஒரு முறை சத்சங்கத்தின் பின்னர் சாதனை நடத்துபவர் 'தம்பி, வீட்டுக்குப்போக நேரம் எடுக்கும். நேற்றிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லையே. ஏதாவது சாப்பிட்டுப் போறீர்களா?'' என்று கேட்டதற்கு, தர்மேந்திரன் அடக்கமான, பணிவான தணிந்த குரலில், ''ஐயா, எனக்கு எல்லாம் நிறையத் தந்திருக்கிறீர்களே; இனி, என்னதர இருக்கிறது'' என்று தனது ஆத்மீக நிறைவைக் குறித்துக் கூறினர். அவரது நோயின் ஒரு கட்டத்தில் காது கேட்காமல் இருந்து மாறியது. அவ்வேளைகளில் 'சத்சங்கங்களைக் கேட்க முடியாமற் போய்விடுமோ'' என அழுவார். வயிறு மிகவும் வீங்கி புடைத்திருந்தது. உடலில் புண், மலசல கழிவு இவையெல்லாம் இருந்த நேரங்களில் கூட அந்த சத்சங்கம் நடக்கும் இடத்துக்குத் தனது விருப்பத்திற்கிணங்க, கொண்டுவரப்பட்டார். அவரைப் பிள்ளையாகப்பெற்ற தந்தையார் மகன் விரும்பியனவற்றையெல்லாம் சிறிதும் குறையாமற் செய்து வந்தார். அத்தகைய ஆதரவு தான் அவரது தாயாரும், சகோதரி கவிதாவும் செய்தார்கள்.

ஓர் எறும்பு கடித்தாலோ, கால் ஏதாவதொன்றில் தட்டுப்பட்டாலோ, தலையிடி வந்தாலோ ஒருவரது முகம் சுண்டி மாற்றமடைந்துவிடுகிறது. ஆனால் இந்த "தம்பி" யினிடத்தே எல்லோரும் கண்ட புதுமை என்னவென்றால், முகத்தில் ஆனந்தம் வடிந்து கொண்டு, எந்த நிலையிலும் மாறாமல் இருந்ததே. ஆத்மீக கருத்துக்கள், இறைவனின் பாடல்கள் ஏதாவது நடந்தால், எந்த வருத்தமும் இல்லாததுபோல் மகிழ்ச்சியுடனேயே காணப்பட்டார். இது எல்லோரும் கண்டு அதிசயித்த புதுமை!

15 மாதங்கள்வரை கடுமையான வருத்தம் வந்திருந்த போதும் பெற்றோர், தர்மேந்திரனின் வருத்தத்திற்கென்று செலவு செய்தது மிகவும் அற்பமே. அவரது ஆத்மீக காரியத்திற்காகவே சந்தோஷமாகப் பெரிதும் செலவு செய்தனர். அதுதான் அவருக்கு இதமானதும் அவர் தகுதிக்கேற்றதுமான செலவு.

## மூன்றாவது புட்டபர்த்தி பயணம்; பாபாவிடம் அவரது பயணம்.

மூன்றாவது முறையாக புட்டபர்த்திக்குப் போக வேண்டும் என்று அழவே ஆரம்பித்துவிட்டார். உடலில் ஒருவித சத்துமே இல்லாத அந்த நாட்களிலே ஓரிரவு 12 மணி முதல் $1\frac{1}{2}$ மணித்தியாலங்களாக "ஹரே பாபா; ஹரே பாபா," என்று பாபாவை பரிவோடும் தூய்மையோடும் அழைத்து தரிசனம் தரவேண்டும் என வேண்டுதல் செய்தார். ஒரு விரிப்பில் வளர்த்தி 4, 5 பேர் தூக்க வேண்டிய அத்தனை மோசமான உடல் நிலையிலும் கூட, அவர் விருப்பத்திற்கிணங்கி தந்தையார், தாய் சகோதரியுடன் புட்டபர்த்திக்குக் கூட்டிச் சென்றார். இயலாத ஒரு காரியத்தைச் செய்த தந்தையின் பெரும் தகைமையைக் கண்டு எல்லோரும் வியந்தனர். ஒரு க்ஷண நேரம் கூட ஓயாது. அவரைக் கவனித்துக் கொண்டிருந்த தன் குடும்பத்தினரை தன் நோய்க்காலத்தில் தகைமையோடு கவனிக்க அவரே

யமைத்துக்கொண்டு வந்தார் என்றுதான் சொல்ல வேண்டும் பெங்களூரில் சுவாமி தனது கையைத்தூக்கி சிறிது நேரம் அவரைப் பார்த்து ஆனந்தமாக ஆசிர்வதித்து அவரை மகிழ்வித்தார். அங்கிருந்து சுவாமி புட்டபர்த்தி செல்ல, சுவாமியைத் தொடர்ந்து புட்டபர்த்திக்குச் சென்று அடுத்த நாளே தனது இறுதி மூச்சு போகிற நேரத்திலே "சாயிராம்" என்று கூறி உடலை நீத்தார்.

பகவானுடைய அனுசரணையுடன் அங்கு பஜனையோடு அவரது உடல் தகனம் செய்யப்பட்டது, பின்பு அந்தியஷ்டியும் பெற்ருேர் செய்தனர். எந்தக் கடவுளைத் தேடினரோ, அந்தக் கடவுள் மனிதரூபம் எய்தி வந்திருக்கும் அந்த இடத்திலேயே தன் உடலைக் கொண்டு போய்ச் சேர்த்து தன் ஆத்மாவை பகவானிடத்திலே அர்ப்பணித்துக் கொண்டார். இவரது வாழ்வு ஆத்ம வழியில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு புதுமையும் எடுத்துக் காட்டுமாக விளங்குகிறது.

மனிதன் உண்மையில் ஆத்ம சொருபமே. அவன் தோன்றி மறையும் உடல் அல்ல. வேதங்கள் மனிதன் சத் + சித் + ஆனந்தம் என்று அறிவுறுத்துகின்றன. கலியுக அவதாரமாக வந்து அவதரித்துள்ள பகவான் சத்திய சாயிபாபா, மக்களை, திவ்யாத்ம சொருபிகளே! பவித்திரானந்த சொருபிகளே! பிரேம சொருபிகளே! என்றே எப்போதும் அழைக்கிருர். அவர் மக்களின் உண்மையைக் கண்டு அந்த உண்மையையே எடுத்துக் காட்டுகிருர். அவர் தான் வந்த அவதார நோக்கம் மக்களிடத்தே பிரேமையை வளர்க்கவே என்று பிரகடனப் படுத்தியுள்ளார். மக்களிடத்தில் பிரேமை வளர காம, குரோதங்களும் அவற்றால் விளையும் பயம், கவலை, சோகமும் மறைந்துவிடும். பிரேமை முழுமையாக வளர்ந்ததும் மரணம் பிறப்பு என்பன கருத்தற்றனவாகிவிடுகின்றன.

தர்மேந்திரன் தான் இந்த உடலல்ல, ஆத்மாவே தான் என்பதைத் தெளிவாக அறிந்ததிலிருந்து, அந்த மெய்ப்

பொருளை அடைய வேண்டும் என்னும் பேரார்வமே, அவருடைய மிகவும் வருத்தத்தைத் தருகின்ற உடல் துன்பத்தையும், மரணத்தைப் பற்றிய எண்ணத்தையும் மறைத்து மேலோங்கி நின்றது. அவ்வேளையிலே அவரது பூர்வ ஜென்ம ஆத்மீக வாசனை அவருக்கு நினைவூட்டியது என்றே சொல்லவேண்டும். ஏனெனில் சொற்ப நாட்களிலேயே ஆத்ம தத்துவத்தை மிகவும் தெளிவாக விளங்கிக் கொண்டார். மூகத்தில் நிறைந்திருந்த ஆனந்தம் இறுதிவரை குறையவில்லை. தனக்கு முடிவு வரும் என்பது தெரிந்திருந்தும் அவருக்குப் பயம் இருக்கவில்லை. அது உடலினுடைய காரியமே என்பதைக் கண்டுகொண்டார். இறைவனோடு சேர்ந்து இரண்டறக் கலக்க வேண்டும் என்ற உள்ளார்ந்த தாகம், உடல் மிகவும் நலிவுற்றுப்போன நிலையிலும் கடவுளின் அவதாரமாக வந்த சத்திய சாயி பாபாவின் சந்நிதியிலே, புட்டபர்த்தியிலேயே தனது உடலையும் சமர்ப்பித்து தனது இலட்சியத்தை அடைந்தார்.

## புட்டபர்த்தி விளம்பரப் பலகையில் இருந்தது:

புட்டபர்த்தியிலே தினமும் பகவானுடைய கருத்துக்கள் எழுதப்படும் விளம்பரப்பலகையில் தர்மேந்திரன் உடல் நீத்த 1989 டிசெம்பர் 13-ம் திகதி எழுதப்பட்டிருந்த கீழ்க் காணும் கருத்துக்கள் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கின்றன.

> "மனித சமுதாயம் முழுவதும் என்னுடைய குடும்பமே... ஆத்மீக உறவால் எல்லோரும் என்னுடையவர்களே. சத்தியத்தாலும் அன்பினாலும் மனித சமூகத்திற்குப் புனர் ஜென்மம் அளிப்பதே எனது வேலை.. என்னை நோக்கி ஓர் அடி முன் வையுங்கள். உங்களை நோக்கி பத்தடி முன் வருவேன். பச்சாத்தாபப்பட்டு ஒரு துளி கண்ணீர் சிந்துங்கள்; உங்களிடத்தே நூறு துளிகளைத் துடைப்பேன்... மரணம் எப்படி நேர்கிறதோ அதிலே தான் ஒருவருடைய பிறப்புத் தங்கியுள்ளது. மரணத்

தின் பின்னர் ஜீவன் எதையடைகிறது என்பது, மரணம் எப்படி ஏற்படுகின்றது என்பதைப் பொறுத்ததே. அது, கடைசித் தறுவாயில் நீங்கள் எதை எண்ணுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே. இறப்பதற்காகவே மனிதன் பிறக்கிருன் என மக்கள் நம்புகிருர்கள்... இது பிழையான கருத்து... இனிமேல் பிறக்காமல் இருக்கவும், முக்தியை அதாவது வீடுதலையைப்பெற்று இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்குமே நீங்கள் பிறக்கிறீர்கள்.

பாபா,

## இவருடைய நோய் பாவத்திஞல் வந்தது என்று கூறமுடியாததாயிருக்கிறது.

தர்மேந்திரன் ஒரு புதுமையான பிறவி என்னும் உண்மை வாசகர்களுக்குத் தெட்டென விளங்கும். நோய் அவரை வருத்திக் கொண்டிருக்க, அவர் அதற்கும் மேலான சுகத்தை, ஆத்ம ஞானத்தை அறிவதிலும் அது தரும் வீடுதலையிலும் கண்டு, அவற்றையே தன் அழியாத தத்துவமான ஆத்மாவிற்கு உணவாக நன்கு போஷித்தார்,

முழுமையும் லெளகீகமாக வாழ்ந்த தாய் தந்தையருடைய வாழ்க்கையை தர்மேந்திரன் ஆத்மவழிக்கே மாற்றிவிட்டார். அவரோடு தொடர்பு வைத்த, ஆத்மவழியில் உள்ள, அனைவருக்கும் அவர் ஒரு சிரேஷ்டர் போலவே இருந்து மறைந்தார்.

இவரது நோயும் துன்பமும் பாவத்திஞலே வந்தது என்று எந்த விதத்திலும் கூற முடியாததாகவே இருக்கிறது. உடல் வருத்தம் ஏற்பட்ட நாட்களிலிருந்தே தெய்விகத்திலே மனம் சென்று கொண்டிருக்கிறபோது, இவரு

---

*சிறுவயதில் தர்மேந்திரன் சத்யசாயி நிறுவனத்தில் ஒரு பாலவிகாஸ் மாணவனுகப் பயின்று விசேஷ பரிசும் பெற்றவர் என்பது இங்கே குறிப்பிடுதற்குரியது.*

டைய இந்த ஜென்மம் தெய்வீகத்துக்காகவே அமைந்தது என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. பொதுவாகத் துன்பங்களும் விடுதலைக்கே வித்தாக உள்ளனவெனினும், தர்மேந்திரனது வாழ்க்கை, ''துன்பம் விடுதலைக்கு வித்து'' என்பதை உறுதியாகக் காட்டுகின்றது. அவருடைய வாழ்வு தனி நபருக்கும் சமுதாயத்திற்கும் ஓர் எடுத்துக் காட்டாகவே விளங்குகின்றது. இங்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிற காரணம் அதுவே.

# முடிவுரை

மனித வாழ்வு தோற்றத்தைப் பொருளாய்க் கொண்டது, தன்னுடைய தோற்றத்தை மனிதன் 'தான்' என்று எண்ணுகிறான். அதற்குப் பெருமை, செல்வம் ஆகியனவற்றைத் தேடுவதான முயற்சியில் வாழ்நாளைக் கழிக்கிறான். ஆனால், தோற்றமோ ஒவ்வொரு க்ஷணமும் மாறி இறுதியில் ஒருநாள் ஏமாற்றி விடப்போகிறது உண்மை.

மனிதன் தான் செய்யும் செயல்கள் எல்லாம் தன்னுடையது என்று எண்ணுகிறான். 7, 8 மணித்தியாலங்கள் அவன் நித்திரையாய் மரம்போலக் கிடந்தபோது யார் பிராணனுக்கினிகளை இயக்கி, இவனை உயிரோடு வைத்து இவனுக்குச் சாந்தி கொடுத்தது என்று எண்ணுவானானால், எல்லாச் செயலும் அந்தப் பரமவஸ்துவினுடையது என்று அறிந்து கொள்வான். அவன் என்று இந்த உண்மையை உணர்ந்து, தெளிந்து கண்டுகொள்கிறானோ, அப்பொழுது, இந்தத் 'தேகம்' தான் ஜென்ம ஜென்மமாய் எண்ணி வந்ததுபோல 'தான்' அல்ல; 'நான் செய்தேன், நான் செய்தேன்' என்று எந்நேரமும் சொல்லும் சொல் இந்த 'உடலினதுமல்ல' அது உடலைத் தாங்கி எங்கும் வியாபித்திருக்கும் ஆத்மாவின் செயலே என்று அறிவான்.

இந்தத் தேகம் 'நான்' என்ற புத்தியிலிருந்தே பிறப்பும் அதைச்சேர்ந்த துக்கம், பயம், சோகம், மரணமும் ஏற்படுகின்றது. இந்த உண்மையை உணர்ந்ததும் அந்தத் தேக ஆத்ம புத்தியை விட்டு ஆன்மாவாகிய மெய்ப் பொருளே 'தான்' என்பதை அறிந்து அதையே தேடுவான். 'மெய்யை அறியவேண்டும், பொய்யிலிருந்து விடுதலை பெற வேண்டும்' என்ற விழிப்பு உண்டானதும், அவனுக்கு உரிய சாஸ்திரங்களும் குருவும் வந்து சேரும். அந்த விழிப்பை உண்டாக்கிக்கொள்ள, அந்த ஊக்கத்திலுள்ளவர்களுடைய கூட்டத்தில் சேரவேண்டும். ஏனெனில் சத்சங்கத்திலுள்ள வர்கள் 'சத்' என்ற உண்மைப்பொருளைத் தேடுவதில் மகிழ்வார்கள். உலகம் ஜடப்பொருட்களைத் தேடுவதில் மாய்ச்சல் கொள்கிறது.

சத் சங்கமும், பெரியோரை அடைவதும், ஜென்ம பாபத்தை மெல்லமெல்ல வேரறச் செய்யும். துன்பமே ஒரு வரை இறைவனையும் உண்மையையும் தேடவைக்கும். துன் பத்திலுள்ளவர்கள் அதன் காரியத்தை அறிந்து கொள்வார் களானால், அது தெய்வீகத்தை வெளிப்படுத்தி விடுதலையை அளிக்கும் என்பது உறுதி.

ஸ்ரீ லங்கா அச்சகம் யாழ்ப்பாணம் • தொலைபேசி 24175